கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி,

திருச்செந்தூர்

பட்டப் படிப்பின் பெயர் : எம்.ஏ. தமிழ் இலக்கியம்,

பட்டப் படிப்பு முறை : முழு நேரம்

கால அளவு : இரண்டு வருடங்கள்

பட்டப் படிப்பின் பயன்கள்

1. தமிழ் இலக்கிய வரலாற்றின் பின்புலத்தை மாணவிகள் அறிந்து கொள்ளுதல்
2. தமிழ் இலக்கியம் கற்பதன் மூலம் மாணவிகள் தமது படைப்பாற்றலையும், திறமைகளையும் வளர்த்துக் கொள்கின்றனர்.
3. இலக்கியத் திறனாய்வு, இலக்கிய மதிப்பு, இலக்கிய விமரிசனம் கற்பதன் மூலம் சிறந்த ஆராய்ச்சியாளராக உருவாகுதல்.

பட்டப்படிப்பின் சிறப்பு பயன்கள்

1. தொல்காப்பியம் என்ற இலக்கணம் கற்பதனால், தமிழ் மொழியின் எழுத்துக்களின் சிறப்பினை அறியமுடிகிறது.
2. சங்க காலத் தமிழர்களின் வாழ்க்கை முறைகளை அகப்பொருள், புறப்பொருள் இலக்கிய, இலக்கணங்களின் வழி அறிந்துகொள்ள முடிகிறது.
3. சிற்றிலக்கிய பாடங்களில் பல்வேறு காலகட்ட அரசியல் நிலை, அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ளலாம்.
4. அறஇலக்கியங்கள், மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைகளையும், ஒழுக்க நெறிகளையும் வலியுறுத்துகின்றன.
5. நாட்டுப்புற இலக்கியங்கள் கற்பதினால், மக்களின் வாழ்க்கை நடைமுறைகளையும், பண்பாட்டினையும் உணர்ந்து, அறிந்து கொள்ள முடிகிறது.
6. ஊடகத்துறையில் மாணவர்களின் செயல்பாடு, மற்றும் ஊடகத்துறையின் வளர்ச்சி, ஊடகத்துறையில் பணியாற்றும் முறைகளையும் அறிந்து கொள்வதற்கு ஊடகத் தமிழ் பாடங்கள் துணைநிற்கின்றது.
7. இலக்கிய மானிடவியல் என்ற பாடத்தின் மூலம் சமத்துவம், சகோதரத்துவம், மானிடப் பண்பாட்டினை அறிந்து கொள்ள முடிகிறது.
8. சமயக் காழ்ப்புணர்ச்சி இல்லாமல் மாணவர்களுக்கு சமய நல்லிணக்க உணர்ச்சியைப் புகுத்திட பக்தி இலக்கியம் என்ற பாடம் துணைபுரிகின்றது.
9. இக்கால இலக்கியங்களின் (நவீன இலக்கியங்கள்) வழி கவிதைகள், கட்டுரைகள் மற்றும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுவதற்கு பயிற்சி வழங்கும் விதமாக அமைகின்றது.

பயிலும் பாடங்களின் பயன்கள்

1. இக்கால நவநாகரிக சமூகத்தை சமாளிக்கும் திறமையை தமிழ் இலக்கிய மாணவிகள் வளர்த்துக் கொள்கின்றனர்.
2. தமிழ் இலக்கியங்கள் மூலம் கலாச்சாரம், மரபுவழி மக்களின் பழக்க வழக்கங்களை அறிதல்.
3. ஒழுக்கம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற நற்பண்புகளை அறிந்துகொள்ளுதல்
4. தமிழ் இலக்கியங்களின் வழி தமிழ்மொழியின் தோற்றம் மற்றும் வரலாற்றினை புரிந்துகொள்ளுதல்
5. தமிழ் மொழியின் வழியே கல்வி கற்பதால் பல்துறை அறிவையும் பெறுகின்றனர்.